1981 மார்ச் 26]

மன்றம் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கே அந்த வழித்தடம் உரியது என்று தீர்ப்பளித்துவிட்டது. அதன்படி இடையில் நிறுத்தப்பட்டிருந்த போக்குவரத்துகள் மீண்டும் திருவண்ணாமலையிலிருந்து திருப்பதிக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகள் செல்வதாகத்தான் செய்தி இருக்கிறது. திருவண்ணாமலையிலிருந்து அப்படிப் போகவில்லை என்பதுதான் அவருடைய குற்றச்சாட்டு. அப்படியிருந்தால் அதை நிவர்த்திக்க பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. சி. சண்முகம் : பொதுவாக வட ஆற்காடு மாவட்டத்தில் இருந்து திருப்பதிக்கு அதிகமான மக்கள் செல்கிறார்கள். காட்பாடி ரெயில்வே ஸ்டேஷனில் அதற்காக அரைமணி நேரம், ஒரு மணி நேரம் ஆயிரக் கணக்கான மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே ரெயிலில் இடம் கிடைப்பதில்லை. எனவே இந்தக் குறையை போக்க ஆரணி, வேலூர், போளூர், திருவண்ணாமலையில் இருந்து கூடுதல் பேருந்துகள் விடப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அதுபற்றியும் அரசு பரிசீலிக்கும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : திருப்பதி ஒரு முக்கியமான இடமாக இருக்கிறது. அதே போன்று மற்றொரு முக்கியமான இடமாக இருப்பது கன்னியாகுமரி. எனவே கன்னியாகுமரியில் இருந்து திருப்பதிக்கு நேரடியாகப் பஸ் விடப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : திருவண்ணாமலைக்கும் கன்னியாகுமரிக்கும் எப்படி சம்பந்தம் என்று தெரியவில்லை. இருந்தாலும் இந்தக் கருத்தை மனதில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

காஞ்சிபுரம்-திருச்சி விரைவுப் பேருந்துப் பணி.

*வினா எண் 503—**திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சீபுரத்திலிருந்து திருச்சி சென்று கொண்டு இருந்த விரைவு வண்டி ஏன் நிறுத்தப்பட்டது ?

(ஆ) மீண்டும் விரைவு வண்டி விடுவதற்கான மக்களின் கோரிக்கைமீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. முத்துசாமி : (அ) இத்தடத்தின் வருவாய் செலவிற்குக் கூட கட்டுமானதாக இல்லாததால் இத்தடத்தில் பேருந்துகளின் இயக்கம் 1980ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் தேதி முதல் நிறுத்தப்பட்டது.

(ஆ) வேறு சில நகரங்களை இணைக்கும் வகையில் இத் தடத்தினை மாற்றி மீண்டும் விரைவுப் பேருந்துகளை இயக்குதல் குறித்து திருவள்ளுவர் போக்குவரததுக் கழகம் பரிசீலித்து காஞ்சீபுரத்திலிருந்து திருச்சி வழியாக கன்னியாகுமரிக்கு இரண்டு பேருந்துகளை 1981ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் தேதி முதல் இயக்க முடிவு செய்துள்ளது.

கால்நடை மருத்துவமனைகளில் சித்த மருத்துவ முறைகள்.

*வினா எண் 505—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிமணியன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் சித்த வைத்திய முறைகள் செயல்படுத்தப்படுகிறதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தமிழகத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைகளிலும், மருந்தகங் களிலும் சித்த வைத்திய முறைகள் முழுமையாக செயல் படுத்தப்படுவதில்லை. எனினும் சித்த வைத்திய முறையில் தயாரிக்கப்பட்ட சில மருந்துகள் கால்நடை மருந்தகங்களில் உபயோகப்படுத்தப்படுகின்றன.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : கால்நடை துறையில் சித்த வைத்திய முறைகளைப் பயன்படுத்துவதினால் குறைவான செலவு ஏற்படும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லி அதையொட்டி அரசாணை பிறப்பிக்கப்பட்டு, சித்த வைத்திய முறையை கட்டாயமாக மருத்துவமனைகளில் கடைப் பிடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தும் அந்த முறை கிராமங்களில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் கடைப் பிடிக்கப்படவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டு மென்றால் ஐம்பது பைசாவில் சுக்கு வாங்கி உபயோகிப்பதை விட்டு நவீன முறையில் பெல்லிஸ் டிங்சர் பத்து ரூபாய்க்குள்ள மருந்தினைப் போடுகிறார்கள். ஆக சித்த வைத்திய முறையை மருத்துவமனைகளில் கடைப் பிடிக்க வேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே கால்நடை மருத்துவமனைகளில் கட்டாயமாக சித்த வைத்திய முறைகளை அமல்படுத்த வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை அரசாங்கம் பரிசீலிக்கும்.